D2

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

வேளாண்மை - உழவர்
நலத் (ப.க) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9

கடித (டி) எண்.109, நாள்: 08.05.2023

அனுப்புநர்
திரு. சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப.,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

அய்யா,

பொருள்: வேளாண்மை – உழவர் நலன் - 2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை அறிவிப்பு எண்.60 - "உழவர் உற்பத்தியாளர் நிறுவன வளர்ச்சிக்கு பல்கலைக்கழக உதவி" - செயல்முறை அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1. 2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "உழவர் உற்பத்தியாளர் நிறுவன வளர்ச்சிக்கு பல்கலைக்கழக உதவி" குறித்த அறிவிப்பு.
2. தங்களது கடித எண்.TNAU/ Agriculture Budget Announcement (2023-2024)/ 2023, நாள் 21.04.2023.

*****

2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"60) <u>உழவர் உற்பத்தியாளர் நிறுவன வளர்ச்சிக்கு பல்கலைக்கழக உதவி</u>

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை வணிக ரீதியாக ஊக்குவிக்கும் வகையில்,

பேரம் பேசும் சக்தியை மேம்படுத்தவும், மதிப்புச் சங்கிலிகளின் செயல்திறனை மேம்படுத்தவும், நவீனத் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சந்தைப்படுத்துதலை விரிவுபடுத்தவும், உள்நாடு, சர்வதேச சந்தை வாய்ப்புகளை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளவும் உதவும்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் இணைப்பு (Tamil Nadu Agricultural University-Farmer Producer Organisation Linkage):

ஒரு யூனிட் - ஒரு உழவர் உற்பத்தியாளர் அமைப்பு (FPO) திட்டம், சிறு மற்றும் குறு விவசாயிகளை மேம்படுத்துவதில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது திறம்பட சந்தைப்படுத்தி பண்ணைப் பொருட்களின் சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயிகள் லாபத்தை அதிகரிக்கவும், பயிர்களின் உற்பத்தித்திறன் அதிகரிக்கவும் உதவுகிறது.

(இ) திட்டத்தின் தொலை நோக்கு

தொழில் முனைவோர் திறன் மேம்பாடு, தொழில் அம்சங்கள், கொள்கை சார்ந்த ஆராய்ச்சிகளை தொடர்ந்து செயல் படுத்துவதன் மூலம், தன்னிறைவு பெற்ற கிராமப்புற அமைப்புகளாக மேம்படுத்துதல்.

(ஈ) குறிக்கோள்கள்:

(i) ஆராய்ச்சி: உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் சந்திக்கும் பல்வேறு சவால்களை அடிப்படை ஆய்வுகள் மற்றும் திறன் - பலவீனம் – வாய்ப்புகள்- சவால்கள் (SWOT) பகுப்பாய்வுகள் மூலம் ஆய்வு செய்து, உற்பத்தியாளர் அமைப்புகளின் செயல்பாடு, செயல்திறன் மற்றும் ஆளுகை போன்றவற்றை மேம்படுத்துதல்.

(ii) திறன் மேம்படுத்துதல்: உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு, அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு வணிக மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல், அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு நிர்வாகத் திறன் பயிற்சி, தொழில் முனைவோர் திறன் மேம்பாடு, நிர்வாக அம்சங்கள், நவீன வேளாண் நடைமுறைகள் (Good Agricultural Practices), மதிப்புக் கூட்டல் அம்சங்கள் போன்றவற்றில் தொடர்ந்து பயிற்சிகள் அளிப்பதுடன், விளை பொருட்களுக்கான புவிசார் குறியீடு பதிவுசெய்வதையும் மேம்படுத்தல்.

..4..

| | |
|---|---|
| முதன்மை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் முக்கிய குழு உறுப்பினர்கள் | 1. முனைவர் எம்.ரவீந்திரன், இயக்குனர் (ஆராய்ச்சி)<br>2. முனைவர். இ.சோமசுந்தரம், இயக்குனர், வேளாண் வணிக மேம்பாடு<br>3. டாக்டர் பி.பி. முருகன், இயக்குனர், விரிவாக்கக் கல்வி<br>4. முனைவர் எஸ்.டி.சிவக்குமார், தொழில்நுட்பம் தனி அதிகாரி மற்றும் பேராசிரியர், வேளாண்மை மற்றும் ஊரக மேலாண்மை<br>5. முனைவர் சி. வேலவன், பேராசிரியர், வேளாண்மை மற்றும் ஊரக மேலாண்மை<br>6. முனைவர் ரா.பிரேமாவதி, பேராசிரியர், வேளாண் விரிவாக்கம்<br>7. டாக்டர் என்.ஸ்ரீராம், பேராசிரியர், வேளாண் விரிவாக்கம் |
| இணை முதன்மை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் | பல்வேறு கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் முதன்மை வளாக விஞ்ஞானிகள் |

(ஏ) திட்டத்தின் பலன்கள்:

(i) உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை ஊக்குவிப்பதனால், விவசாயிகளிடையே தொழில் முனைவோர் திறனை வளர்க்க இயலும்.

(ii) இம்முயற்சியின் மூலம் விவசாயப் பொருட்களின் உற்பத்தியும் ஏற்றுமதியும் அதிகரிக்கும்.

(iii) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் இணைப்புத் திட்டத்தின் மூலம், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் சிறந்த செயல்பாடு, மேம்பட்ட செயல்திறன், விவசாயிகளிடையே சந்தைப்படுத்துதலும் அவர்களின் வருமானமும் அதிகரிக்கும்.

6. கொள்கை தயாரிப்பாளர்கள், பங்குதாரர்களுக்கு முக்கிய ஆராய்ச்சி வெளியீடுகளை பரப்புவதற்கு கொள்கை பணிமனைக் கூட்டங்களும் மற்றும் கருத்தரங்குகளும் நடத்த வேண்டும்;

4. மேலும், இச்செயல்முறை அறிவுரைகளைத் தொடர்ந்து, தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த மாதாந்திர முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(கையொப்பம்) 08/05/2023

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசுச் செயலாளருக்காக

8/5/2023

நகல்:-

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் , நீர்வள ஆதாரத் துறை, சென்னை- 600 005.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர், தமிழ்நாடு நீர்ப்பாசனம் மற்றும் வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (Tamil Nadu Irrigated Agriculture Modernization Project), சேப்பாக்கம், சென்னை-600 005.

முதன்மைச் செயலாளர் / ஆணையர், சர்க்கரைத்துறை, சென்னை-35.

இயக்குநர், வேளாண்மைத் துறை, சேப்பாக்கம், சென்னை-5.

இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சேப்பாக்கம், சென்னை-5.

இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, கிண்டி, சென்னை-32.

செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை-32.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), வேளாண்மைப் பொறியியல் துறை,சென்னை-35.

இயக்குநர், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை, சென்னை-32.

முதன்மை பொது மேலாளர், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD), 48, மகாத்மா காந்தி சாலை, அஞ்சல் பெட்டி எண்.6074, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு (Tamil Nadu Small Farmers' Agribusiness Consortium), 116, உள்வட்டச்சாலை, கிண்டி தொழிற்பேட்டை, சென்னை – 600 032.

உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-9.

வேளாண்மை – உழவர் நலத் (வ(ம)தி/அந(மு3) துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.